# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 135/2016

ஆணை எண். 0015/2017

நாள் : 09/02/2017

திரு தி. பிரபுபாண்டியன், – மனுதாரர்
உடுமலைப்பேட்டை – 624 126.

1.திரு கி. ராஜன், மாநகராட்சி ஆணையர்,
2.திரு எஸ். வில்லியம் சகாயராஜ், கண்காணிப்பாளர், – எதிர் மனுதாரர்கள்
3.திரு கே. இரமேஷ் , வருவாய் ஆய்வாளர், திண்டுக்கல்
மாநகராட்சி, திண்டுக்கல்.

உடுமலைப்பேட்டை, எண்.76/ சி–27, ராமசாமி நகரில் வசிக்கும் திரு தி. பிரபுபாண்டியன் அவர்களது 22.02.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.02.2016 அன்று பெறப்பட்டு 135/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

உடுமலைப்பேட்டை, எண்.76/ சி–27, ராமசாமி நகர் முகவரியில் வசிக்கும் திரு தி. பிரபுபாண்டியன் என்பவர், தனது 22.02.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில், 2014–ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சி, 9–வது வார்டுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலின்போது செய்யப்படாத பணிகளுக்கு போலிப் பட்டியல் மூலமாக எதிர்மனுதாரர்கள் மூவரும் அரசு நிதியை கையாடல் செய்துள்ளதால், அவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு கையாடல் செய்யப்பட்ட அரசு நிதியினை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும் பூத்சிலிப் அச்சிட்டு வழங்கிய நிறுவனத்திற்கு தொகை வழங்காமல், போலியாகப் பட்டியல் பெற்று ரூ. 80,795/– கையாடல் செய்ததாக முறையீட்டு மனுதாரர் முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக 13.05.2016 அன்று முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு மனுதாரருக்கு 01.04.2016 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால், தனது 11.05.2016 நாளிட்ட கடிதத்தில் தனது உடல்நிலை சரியில்லாத

காரணத்தினால் 13.05.2016 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வரஇயலாது எனத் தெரிவித்திருந்தார். எனினும், முறையீட்டுமனுதாரரின் வேண்டுகோளின்படி மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்து 15.07.2016 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு 18.05.2016 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. முறையீட்டு மனுதாரர் எந்தவித பதிலும் அளிக்காமல் மேற்குறிப்பிட்ட நாளில் நடைபெறவிருந்த விசாரணைக்கும் வரவில்லை.

3. எதிர்மனுதாரர்களிடம், முறையீட்டு மனுதாரரின் மேற்படி குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக அறிக்கை இம்முறைமன்ற அறிவிப்பாணை எண்.136/2016, நாள் 01.03.2016 மூலம் கோரப்பட்டு, 28.03.2016 அன்று மேற்படி அறிக்கை பெறப்பட்டது. மேலும், இம்முறைமன்ற அழைப்பாணை எண். 135/2016 நாள் 08.12.2016 மூலம் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு 18.01.2017 அன்று விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு எதிர்மனுதாரர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. விசாரணையின்போது, திண்டுக்கல் மாநகராட்சி, 9–வது வார்டுக்கு 18.09.2014 அன்று இடைத்தேர்தல் நடத்துவதற்கான அனைத்து பணிகளும் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி முன்பே தயார் செய்யப்பட்டது என்றும் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பொருள்கள் அனைத்தும் உண்மையாகவே வாங்கப்பட்டன என்று முதல் எதிர்மனுதாரரான மாநகராட்சி ஆணையர் திரு கி. ராஜன் தெரிவித்தார். ஜூபிடர் பிரஸ், திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வருகிறது என்றும், அந்நிறுவனம் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிமுடித்து வழங்குவார்கள் எனக்கருதி அவர்களிடம் பணி ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். கடந்த உள்ளாட்சி தேர்தலின்போது மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் பணி ஆணை வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளிகள் மூவரிடம் பெறப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஜூபிடர் பிரிண்டிங் பிரஸ் நிறுவனத்திற்கு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சி பிரிவில் தலைமை எழுத்தராகப் பணியாற்றியபோது திண்டுக்கல் மாநகராட்சி, 9–வது வார்டுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலுக்கான ஒருங்கிணைப்பாளர் பணியினையும் மேற்கொண்டிருந்தார் என தெரிவிக்கப்பட்டது. மாநகராட்சி ஆணையர், திரு கி. ராஜன் அளித்த வாக்குமூலத்தை மற்ற இரண்டு எதிர்மனுதாரர்களும் உறுதி செய்தனர்.

4. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டு, எதிர்மனுதாரர்கள் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் அவர்களது அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில் மனுதாரர் திண்டுக்கல் மாநகராட்சி வார்டு இடைத்தேர்தலின்போது ஒருங்கிணைப்பு பணியினை மேற்கொண்டுள்ளார். அதுபோது எதிர்மனுதாரர்களில் ஒருவரான திரு கே. இரமேஷ், மனுதாரருடன் தேர்தல்பணி நிமித்தமாக தொடர்பில் இருந்து வந்துள்ளார். ஆனால் 18.09.2014 அன்று நடைபெறவிருந்த தேர்தலுக்கு முறைகேடாக கையாடல் செய்தது குறித்து, 22.02.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் சுமார் 16 மாதங்கள் கழித்து இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். தனது குற்றச்சாட்டில், தேர்தலுக்காக பூத் சிலிப் அச்சிட்டு வழங்கிய நிறுவனத்திற்கு தொகை வழங்காமல், ஜூபிடர் ஆப்செட் நிறுவனத்திடமிருந்து போலியாகப் பட்டியல் பெற்று நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். பூத்சிலிப் அச்சிட்டு வழங்கிய நிறுவனத்திற்கு பணம் வழங்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார். தனது முறையீட்டு மனுவில் மேற்படி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும், முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டு உண்மையெனில், பணி முடித்துத் தந்த நிறுவனம் ஏன் இதுகுறித்து புகார் தெரிவிக்கவில்லை என்ற வினா எழுகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள் ரூ. 80,795/– கையாடல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட தொகையும் ஜூபிடர் நிறுவனத்திற்கு 02.07.2015 நாளிட்ட காசோலை எண். 113832 ன் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த ஆவணங்களை மனுதாரரே சமர்ப்பித்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர், ரூ.80,795/–ஐ எதிர்மனுதாரர்கள் கையாடல் செய்துள்ளார்கள் என்பதற்கான ஆதார ஆவணங்கள் எதையும் இம்முறைமன்ற நடுவத்தின்முன் சமர்ப்பிக்கவில்லை. மேலும், முறையீட்டு மனுதாரர் தனது குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையையும் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி உரிய விளக்கம் அளித்து நிரூபிக்கத் தவறிவிட்டார். அரசுப்பணியில் இருந்த மூத்த

பணியாளர் முகாந்திரம் இல்லாமல் இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள் மீது சுமத்துவதும், அதனை நிரூபிக்க இம்முறைமன்ற விசாரணைக்கு உட்படாமல் இம்முறைமன்ற நடுவம் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்களின் நேரத்தை வீணடிப்பதும் மிகவும் கண்டிக்கத்தக்கது. எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற செயல்களில் முறையீட்டு மனுதாரர் ஈடுபடுவதை தவிர்க்குமாறு எச்சரித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 9– ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

27/2/2017

செயலாளர்.

10.2.17

10/2/17

பெறுநர்

1.திரு தி. பிரபு பாண்டியன்,
எண்.76/சி–27, ராமசாமி நகர், உடுமலைப்பேட்டை– 624 126.

2.திரு கி. ராஜன், மாநகராட்சி ஆணையர்,
சிவகாசி நகராட்சி, சிவகாசி, விருதுநகர்.

3.திரு எஸ். வில்லியம் சகாயராஜ், கண்காணிப்பாளர்,
திண்டுக்கல் மாநகராட்சி, திண்டுக்கல்

4.திரு கே. இரமேஷ் , வருவாய் ஆய்வாளர்,
மணப்பாறை நகராட்சி, மணப்பாறை.